1970 மார்ச் 3]

கலப்புமணம் செய்துகொண்ட தம்பதிகளுக்கு சலுகைகள்

***178 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மை, அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கலப்புத் திருமணம் செய்துகொண்ட மணமக்களுக்கு அவர்களின் கல்வி, தொழில் ஆகியவற்றுக்கு மேலும் சலுகைகள் தரும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்கள் சமூதாயத்தில் பெரும்பாலும் வைதீக எண்ணம் உள்ளவர்களால் புறக்கணிக்கப்படுகிறார்கள். எனவே, கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதில் முதல் இடம் அளிப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு, கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்கும் வகையில் தங்கப் பதக்கம் பரிசு அளிக்கப்படுகிறது. வேலை வாய்ப்பு தரப்படும் என்றால், ஒருக்கால் வேலை வாய்ப்பு கிடைப்பதற்காக கலப்புத் திருமணம் செய்துகொண்டு விட்டு, பிறகு விட்டுவிட்டால் நிலைமை என்ன ஆகும் என்பதையும் யோசிக்க வேண்டியிருக்கிறது.

திரு. கே. பி. எஸ். மணி : கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு தங்கப் பதக்கம் பரிசு கொடுப்பதினால் அவர்களுடைய வாழ்க்கை ஒன்றும் முன்னேறிவிட முடியாது. அது ஒரு அபிமானமே தவிர, வேறு ஒன்றுமில்லை. அவர்கள் வருங் காலத்தில் பல துறைகளிலும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை உத்தேசித்து, அரசு லாண்டு ஸீலிங்கிலிருந்து கிடைக்கும் நிலங் களைப் பிரித்துக் கொடுப்பதில், நேரடியாக விவசாயம் செய்பவர் களுக்கு முதல் சலுகையும், மாஜி இராணுவத்தினருக்கு இரண்டாவது சலுகையும், மூன்றாவதாக கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களுக்கு இந்தச் சலுகையைக் கொடுப்பதற்கு அரசு வழிவகை செய்யுமா ? அப்படிச் செய்தால் கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகள், சமுதாயத்தில் மற்றவர்களால் பகிஷ்கரிக்கப்படும்பொழுது, அவர்களுடைய பிற்கால வாழ்க்கை சற்று நிம்மதியாக இருக்கும். ஆகவே, அதைச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கலப்புத் திருமணம் செய்துகொள்வதிலே, ஜாதி வேற்றுமைகளை ஒழிக்க வேண்டும் என்ற ஒரு கொள்கை அடிப்படையில் நல்ல வைராக்கி யத்தோடு செய்து கொள்வதாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் கூட கலப்புத் திருமணம் செய்துகொண்டு பல எதிர்ப்பிற்கிடை யிலே நல்ல முறையிலே வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்

என்பது தெரியும். எனவே, சில சலுகைகளைப் பெறுவதற்காக கலப்புத் திருமணம் செய்துகொள்வதைவிட கொள்கையின் அடிப் படையில் கலப்புத் திருமணம் செய்துகொள்வது மிகவும் நல்லது.

திரு. ஜெ. பெள்ளி கவுடர் : தலைவர் அவர்களே, கடந்த ஆண்டில் கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களின் எண் ணிக்கை எவ்வளவு என்பதை அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கடந்த ஆண்டு அல்ல, 1968-ம் ஆண்டில் கலப்புத் திருமண பரிசு பெற்ற தம்பதிகள் மாத்திரம் 48 பேர்கள் என்ற கணக்கு இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : கலப்புத் திருமணம் செய்துகொண்ட பெண்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்தவர்களின் விகிதாசாரம் கூடுதலா அல்லது மற்ற வகுப்புப் பெண்களின் விகிதா சாரம் கூடுதலா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்தப் புள்ளிவிவரம் இப்பொழுது இல்லை. என்றாலும், பொதுவாக கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களில் ஆணோ அல்லது பெண்ணோ யாரோ ஒருவர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரைச் சேர்ந்தவர் களாகத்தான் இருப்பார்கள். எந்த விகிதாசாரப்படி என்பதற்கான கணக்கை இப்பொழுது எடுக்கவில்லை.

திரு. எஸ். இராமச்சந்திரன் : ஜாதி மத பேதமற்ற சமுதா யத்தை வரும் தலைமுறையிலாவது உருவாக்க வேண்டும் என்பதற்கு அச்சாணியாக அமைந்திருப்பது தான் கலப்புத் திருமணமாகும். ஆகையினால், இந்தத் திருமணங்களை ஊக்குவிக்கின்ற வகையில் தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அளிக்கப்படுகிற சலுகைகள் அத்தனையையும் மாநில அரசு தரவேண்டும். அதே போல மத்திய அரசு தருவதற்கும் ஏற்பாடு செய்வதற்கு இந்த அரசு ஆலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கலப்புத் திருமணம் செய்துகொண்டாலும், அந்தத் தம்பதிகளில் ஒருவர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினராக இருப்பர். ஆகவே, அவருக்கு அந்த சமுதாயத்தின் அடிப்படையில் எல்லாச் சலுகைகளையும் அரசாங்கம் செய்து கொடுத்துக்கொண்டுதான் இருக்கும். இது மாநில அரசின் திட்டமாகும். மத்திய அரசாங்க உதவிகோரும் எண்ணம் இப்பொழுது இல்லை.

Milk Powder

* 179 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state :

(a) whether a large quantity of milk powder is being secured by the State Government from UNICEF ; and

(b) if so, the details thereof?